IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS.56/2022

Deposition of Witness : PW 1

Name : தரன் சாய்

Father's Name /W/o : த/பெ. ஜனார்தனம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : திருநின்றவூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 06.03.2025.

முதல் விசாரணை தொடர்ச்சி

1. ரவி என்பவர் பெயரில் உள்ள 26.10.2006 தேதியிட்ட கிரைய ஆவணம் கணினி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், பட்டா எண் 11, 35 க்கான கணினி பட்டா வா.சா.ஆ.2 ஆகவும், 30.03.2022 தேதியிட்ட ரவி பெயரில் உள்ள தீர்வை ரசீது வா.சா.ஆ.3 ஆகவும், பசலி 1428 க்கான கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் கணக்கு வா.சா.ஆ.4 ஆகவும், பசலி 1430 க்கான கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் கணக்கு வா.சா.ஆ.5 ஆகவும், பசலி 1431 க்கான கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் கணக்கு வா.சா.ஆ.6 ஆகவும், 06.04.2022 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் கணினி நகல் வா.சா.ஆ.7 ஆகவும், பட்டா எண்.2736 க்கான கணினி பட்டா வா.சா.ஆ.8 ஆகவும், பட்டா எண்.875 க்கான கணினி பட்டா வா.சா.ஆ.9 ஆகவும்,

பசலி 1434 க்கான கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் கணக்கு வா.சா.ஆ.10 ஆகவும், 23.01.2025 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள தீர்வை ரசீது வா.சா.ஆ.11 ஆகவும், 03.02.2025 தேதியிட்ட பெருங்களத்தூர் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

( வா.சா.ஆ. 8 முதல் வா.சா.ஆ.12 வரையிலான வழக்கில் பின்னிட்டவை என்று பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஏற்கனவே ஆவணங்களை அனுமதிக்ககோரி இடைக்கால மனு எண்.1/2025 தாக்கல் செய்யப்பட்டு 26.02.2025 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை நிராகரிக்கப்படுகிறது.)

<u>குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்</u>

2. பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.